# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.414/2022**

**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | Caste | : |
| Father 's Name / Husband Name | : ரத்தினசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**(04.03.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பகரூதின் பரூக் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.பாண்டியராஜ் ஆகியோர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். அவர்கள் பணி மாறுதலாகி வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 14.11.2017ம் தேதி சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பகரூதின் பரூக் அவர்கள் திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது திருமங்கலம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ராகுல் என்பவரை விசாரணை செய்து அவர் அளித்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று 14.00 மணிக்கு நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.

378/2017 பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதச படி வழக்கு பதிவு செய்து புகார் வாக்குமூலத்தையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கு கொண்டு அன்றைய தினமே 15.00 மணிக்கு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சுந்தர் மற்றும் குருசாமி ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் இளமாறன், விக்னேஷ், ஆகியோர்களில் எதிரி விக்னேஷ் என்பவரை நீக்கம் செய்து தனி அறிக்கை தயார் செய்துள்ளார். **தனி அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி இளமாறன் 24.11.2017ம் தேதி மாண்புமிகு மதுரை மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் முன்பிணையில் பெற்றுவிட்டபடியால் அவர் கைது செய்யப்படவில்லை. பின்பு இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் திரு.பாண்டியராஜ் அவர்கள் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்து காயச்சான்று வழங்கிய திருமங்கலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.கார்த்திக்சந்தர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளில் விக்னேஷ் என்பவரை நீக்கம் செய்து சார்பு ஆய்வாளர் திரு.பக்ருதின் பருக் அவர்கள் தாக்கல் செய்த தனி அறிக்கையின் அடிப்படையில் எதிரி விக்னேஷை நீக்கம் செய்து அறிக்கை தயார் செய்துள்ளார். **எதிரி நீக்க அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பக்ருதின் பருக் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கின்

புலன் விசாரணையை முடித்து எதிரி சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார் செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.